


**12.06.2025**

**தலைப்பு செய்திகள்**

1. **நாட்டின் தொழில்நுட்ப வளர்ச்சியில் படைப்பாற்றல் திறன்மிகு** இளையோரின் பங்கு இன்றியமையாதது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

2. **வேளாண் உத்தரவாத திட்டம்** விவசாயத்தில் உள்ள இடைவெளியை களைவதாக மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

3. **மேட்டூர் அணை பாசனத்திற்காக இன்று திறக்கப்பட்டது.**

4. **தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக டெல்டா மாவட்டங்கள் திகழ்கிறது** என முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

5. **ஸ்டெட்கார்ட் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில்** ரோஹண் போபண்ணா, **Sander Gille** இணை இன்று களமிறங்குகிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

**நாட்டில் பெருகிவரும் தொழில்நுட்ப வளர்ச்சியில்** படைப்பாற்றல் திறன்மிகு இளையோரின் பங்கு இன்றியமையாதது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டியுள்ளார்.

mygovindia சமூகவலைதள பதிவுகளுக்கு பதிலளித்துள்ள பிரதமர், நம்நாடு சுயசார்பு பாரதபாதையில் முன்னேறி சென்று கொண்டிருப்பதாக கூறினார்.

திறன்களை மேம்படுத்தி ஆளுமைபெற இளையோரை டிஜிட்டல் இந்தியா வழிகோலியதாக எடுத்துரைத்த பிரதமர், இதன்மூலம் கடந்த 11 ஆண்டுகளில் உலகளாவிய தொழில்நுட்பத்தின் ஆற்றல் மையமாக இந்தியா உருவெடுத்துள்ளது என்றார்

**நவீன தொழில்நுட்பங்கள்** எண்ணற்ற பயன்களை மக்களுக்கு வழங்கியிருப்பதாக அவர் கூறினார்.

தொழில்நுட்ப பெருக்கத்தால், சேவை விநியோகமும், வெளிப்படை தன்மையும் உறுதி செய்யப்பட்டு ஏழை எளிய மக்களின் வாழ்க்கையில் ஆளுமை கொண்டுவரப்பட்டதாக அவர் எடுத்துரைத்தார்.

தொலைதூர கிராமங்களிலும் இணையதள சேவை முதல் டிஜிட்டல் பண பரிவர்த்தனைகள் நடைபெறுவதை எடுத்துரைத்த அவர், இந்த மாபெரும் மாற்றங்கள் நம்நாட்டை உலகளவில் முன்னெடுத்துச் சென்றுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

**அமித்ஷா**

**பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான ஆட்சியில்,** தொழில்நுட்பத்தால் வர்த்தகத்துறை மேம்பட்டுள்ளதோடு, டிஜிட்டல் பொருளாதாரம் உயர்ந்ததாக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

கல்வி, வர்த்தகம், மருத்துவம் உட்பட அனைத்து துறைகளிலும் டிஜிட்டல் புரட்சி ஏற்பட்டதாக தமது சமூகவலைதளப் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

**நிர்மலா சீதாராமன்**

**நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் நேரடி பண** பரிவர்த்தனை முறை 90 மடங்கு அதிகரித்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

2014-ம் ஆண்டு 7 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக இருந்த நேரடி பண பரிவர்த்தனை சென்ற நிதியாண்டில் 6.83 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது என்று தமது சமூக வலைதளப்பதிவில் அமைச்சர் கூறியுள்ளார்.

ஆண்டொன்றுக்கு 18 ஆயிரத்து 600 கோடி பரிவர்த்தனைகள் கையாளப்படுவதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டுள்ளார்.

**இந்நிலையில் UPI டிஜிட்டல் பண** பரிவர்த்தனைகளில் வர்த்தகர்களுக்கு கட்டணம் விதிக்கப்படுவதாக வெளியான செய்தி தவறானது என மத்திய நிதியமைச்சகம் தெளிவுபடுத்தியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

**பிரதாப் ராவ் ஜாதவ்**

**சர்வதேச யோகா தினமான வரும் 21-ம் தேதி** ஒருலட்சத்திற்கும் அதிகமான யோக நிகழ்வுகள் காலை ஆறரை மணிக்கு தொடங்கி ஒருமணிநேரம் நடைபெறும் என்று மத்திய ஆயுஷ் இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

ஒரே பூமி ! ஒரே சுகாதாரம் ! என்ற கருப்பொருளுடன் இந்த ஆண்டு கொண்டாடப்படும் யோகா தினத்தின் முக்கிய நிகழ்வாக ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் பிரதமர் திரு.நரேந்திரமோடி பங்கேற்பார் என்றார்.

ஆகாஷ்வாணி செய்திபிரிவிற்கு அவர் வழங்கிய சிறப்பு பேட்டியில் பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான அரசு யோகக்கலையை முன்னெடுத்து சென்று இந்தியாவிலும், உலக நாடுகளிலும் நலவாழ்விற்கு யோக கலையை பிரபலப்படுத்தியதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

**ஷிவ்ராஜ் சிங் சௌஹான்**

**வேளாண் உத்தரவாத திட்டம் ஆராய்ச்சி மற்றும்** அடித்தட்டு விவசாயத்திற்கு இடையிலான இடைவெளியை களைவதாக மத்திய அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

விக்சித் க்ருஷி சங்கல்ப் அபியான்இயக்கம் இன்றுடன் நிறைவடைவதை ஒட்டி குஜராத் மாநிலம் பர்தோலியில் இன்று விவசாயிகளிடையே அவர் உரையாற்றினார்.

இந்த இடைவெளி களையப்படுவதால் லாபகரமான ஏற்றுமதி தரத்திற்கு உகந்த நிலையான வேளாண் துறை உருவாகும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

விவசாயிகளின் குறைகளை அறிந்துகொள்வதோடு, அவர்களுக்கு தொழில்நுட்ப விளக்கங்களை அளிக்க இந்த இயக்கம் வழிகோலியதாக அவர் தெரிவித்தார்.

இதன்மூலம் வேளாண் உற்பத்தி அதிகரித்து விவசாயிகளின் வருவாய் பெருக்கத்தோடு, நிலையான லாபகரமான வேளாண் நிலைப்பாடுகளை நடைமுறைப்படுத்த வகை செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இதனிடையே கிருஷ்ணகிரி மாவட்டத்தில் விக்சித் க்ருஷி சங்கல்ப் அபியான் இயக்கம் மூலம் விவசாயிகளுக்கு காப்பீடு திட்டம், மண்வள அட்டை, மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் உள்ளிட்டவை குறித்து விளக்கமளிக்கப் பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

**மத்திய அரசின் 11 ஆண்டுகாலம் சிறப்பு செய்தித்தொகுப்பு**

...

**நாட்டில் கடந்த 11 ஆண்டு ஆட்சியில் டிஜிட்டல் ஆளுமை, நல்லாட்சி, உள்ளடக்கத்தில் மின்னணு தொழில்நுட்பத்தின் பங்கு குறித்த தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.**

கடந்த 10 ஆண்டுகளுக்கு மேல் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் இலகுவான வாழ்க்கை முறைக்கு தொழில்நுட்ப சேவைகளை மத்திய அரசு நடைமுறை படுத்தியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் வரை ஆயிரத்து 867 கோடி மின்னணு பரிவர்த்தனைகள் மூலம் 25 லட்சம் கோடி ரூபாய் பணபரிவர்த்தனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், பூட்டான், நேபாளம், இலங்கை, பிரான்ஸ், மொரீஷியஸ் நாடுகளிலும் யூபிஐ. பணபரிவர்த்தனை நடைபெறுவதன் மூலம், இந்தியா முன்னோடி நாடாக உருவெடுத்துள்ளது.

நாட்டில் 2 லட்சத்து 18 ஆயிரத்திற்கும் அதிகமான கிராம பஞ்சாயத்துகளில் பாரத் நெட் திட்டத்தின் மூலம் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆதாருடன் கூடிய நேரடி பணபரிவர்த்தனை திட்டத்தால் வெளிப்படை தன்மை அதிகரித்து மக்கள் உரிய பயன்களை பெறுகின்றனர்.

மின்னணு தொழில்நுட்பம் நாட்டின் அனைத்து பகுதிகளையும் இணைத்திருப்பதோடு, மக்களின் வாழ்க்கை, பணபரிவர்த்தனை முறைகளையும் மாற்றியமைத்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக** டெல்டா மாவட்டங்கள் திகழ்கிறது என முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டத்தில் ஆயிரத்து 649 கோடி ரூபாய் மதிப்பில் புதிய பணிகளுக்கு அடிக்கல்நாட்டி முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்துவைத்ததோடு, ஒருலட்சம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசியஅவர், ஒரு குவிண்டாலுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய் நெல் கொள்முதல் விலை உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்தார்.

சேலம் மாநாராட்சியில் 100 கோடி ரூபாய் மதிப்பில் சாலைகள் மேம்பாடு பாலப்பணிகள் மேற்கொள்ளப்படும் உள்ளிட்ட 6 புதிய அறிவிப்புகளை முதலமைச்சர் வெளியிட்டார்.

.. வாய்ஸ் ..

முன்னதாக மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக முதலமைச்சர் இன்று தண்ணீர் திறந்து வைத்தார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

**கே.என்.நேரு**

**மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர்** கடைமடை செல்லும் வகையில் தூர்வாரும் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளது என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இதன்மூலம் 6 லட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்படும் என்றார்.

திருச்சி மாவட்டம் பெட்டவாய்த்தலையில் குடிநீரில் கழிவுநீர் கலந்ததாக கூறப்படும் செய்தி தவறனாது என்றும், குடிநீர் குழாயில் ஏற்பட்ட உடைப்பு காரணமாக மணல் கலந்து காணப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

முன்னதாக திருச்சி கே.கே.நகர், கிராப்பட்டி பகுதி மக்களுக்கு வீட்டுமனை பட்டாக்களை அமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

**கோவி.செழியன்**

**தமிழக பள்ளிகல்லூரிகளில் ராகிங்கை தடுக்க** கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு சிறப்புகுழுவினர் நியமிக்கப்பட்டுள்ளதாக மாநில உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

தஞ்சையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், உயர்கல்வியில் இடைநிற்றல் இல்லாமல் மாணாக்கர் கல்வியை தொடர தமிழக அரசு நடவடிக்கை எடுத்துவருவதாகவும் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

**உலக குழந்தை தொழிலாளர்**

**உலக குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம்** இன்று கடைபிடிக்கப்படுகிறது.

தேசிய குழந்தை தொழிலாளர் திட்டத்தின் மூலம் குழந்தை தொழிலாளர் முறையை ஒழிப்பதில் மத்திய அரசு முனைப்புடன் பணியாற்றி வருவதாக மத்திய தொழிலாளர் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

எந்த இடத்திலும் குழந்தைகள் கட்டாயமாக வேலை செய்ய வைக்கப்படுவது கண்டறியப்பட்டால் உள்ளூர் காவல் நிலையத்திலோ, இணையதளத்திலோ புகார் தெரிவிக்கலாம் எனவும் அரசு கூறியுள்ளது.

இத்தினத்தை ஒட்டி முதலமைச்சர் வெளியிட்ட செய்தியில் தமிழ்நாட்டை குழந்தை தொழிலாளர் இல்லா மாநிலமாக மாற்ற ஒருங்கிணைந்து செயல்பட அழைப்பு விடுத்துள்ளார்.

இந்நாளையொட்டி மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. சி.வி.கணேசன் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக வளாகத்தில் விழிப்புணர்வு மனித சங்கிலி பேரணியை இன்று தொடங்கிவைத்தார்.

திருச்சி, திருப்பத்தூர், தூத்துக்குடி, தர்மபுரி, திருப்பூர், ராணிப்பேட்டை, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தின உறுதிமொழி அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் இன்று ஏற்கப்பட்டது.

இதனையடுத்து கையெழுத்து இயக்கமும் தொடங்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖

**நயினார் நாகேந்திரன்**

**தமிழ்மொழியின் தொன்மையை போற்றுவதிலும்,** தமிழகத்தின் வளர்ச்சிக்கும் பிரதமர் திரு. நரேந்திரமோடி அரசு உறுதிபூண்டு உள்ளதாக பி.ஜே.பி. மாநிலதலைவர் திரு.நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

குஜராத் மற்றும் காசியில் ஆண்டுதோறும் நடைபெறும் தமிழ்சங்கமம் நிகழ்வுகள் இதனை பிரதிபலிப்பதாக தமது சமூக வலைதளப்பதிவில் அவர் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

**இருவரி**

**சிவகங்கை மாவட்டத்தில் சிறப்பு கால்நடை** சுகாதார விழிப்புணர்வு முகாம்களை மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பெரியகருப்பன் சிவபுரி பட்டி கிராமத்தில் இன்று தொடங்கிவைத்தார்.

**அரியலூர் மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு** இயந்திர வைப்பறையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் இன்று ஆய்வுசெய்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**ஜெர்மனியில் நடைபெறும் ஸ்டெட்கார்ட் ஓப்பன்** டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ரோஹண் போபண்ணா, பெல்ஜியத்தின் **Sander Gille** இணை - அமெரிக்காவின் டெய்லர், செக்குடியரசின் ஜிரி இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**லண்டன் லார்ட்ஸில் நடைபெறும் உலக டெஸ்ட்** கிரிக்கெட் சாம்பியன்பட்ட இறுதி போட்டியின் முதல்நாள் ஆட்டநேர இறுதியில் தென்னாப்பிரிக்கா தனது முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு 43 ரன் எடுத்திருந்தது.

ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் 212 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

2-ம் நாள் ஆட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

❖❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖❖❖